இரவு வேளையில் வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்கள் எடுப்பவர்களுக்கு இலவச தங்குமிட வசதி வழங்கப்படும்.

மிதுசா கொமினிக்கேசன்ஸ்
முதலாவது மாடி,
புதிய பஸ் நிலையம், வவுனியா.
தொலைபேசி: 024 { 2033 / 2053

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மிதுசா கொமினிக்கேசன்ஸ்
உள்ளூர் / வெளியூர் தொலைத் தொடர்பு
FAX சேவை
★ 24 மணித்தியால சேவை ★
58, 59, முதலாவது மாடி,
புதிய பஸ் நிலையம்,
வவுனியா.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 11 சனிக்கிழமை (25-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 59

# பேச்சுகள் மூலம் தீர்வு காண அரசை வலியுறுத்துவோம்!

## யாழ். நிலையைக் கண்டறிந்த பின் கத்தோலிக்க தூதுக்குழு உறுதி

யாழ்ப்பாணம், ஜனவரி 25

"யாழ். குடாநாட்டு மக்கள் அமைதியான முறையில் நடத்தும் வாழ்க்கையைக் குழப்பக் கூடியதான பாரிய இராணுவ நடவடிக்கை எதனையும் எடுக்கக் கூடாது; பேச்சுகள் மூலம் சமாதானத் தீர்வைக் காணும் அணுகு முறையையே அரசு கடைப்பிடிக்க வேண்டும்." கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவை நேரில் சந்தித்து இவ்வாறு வலியுறுத்துவோம்.

தென்னிலங்கையிலிருந்து குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த கத்தோலிக்க நல்லெண்ணத் தூதுக்குழு, இங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிந்த பின்னர் இப்படித் தெரிவித்திருக்கிறது.

நேற்று மாலை கொழும்பு திரும்புவதற்கு முன்னர் தூதுக்குழுவினர் யாழ். ஆயர் இல்லத்தில் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டது.

தூதுக்குழுவினர் யாழ். நிலையை நேரில் கண்டறிந்ததுடன், விடுதலைப் புலிகளின் தலைவர்களையும் நேரில் சந்தித்துப் பேசினர் என்பது தெரிந்ததே.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தூதுக்குழுவினர் சார்பில் அதன் தலைவர் அருட்சகோதரர் அலெக்ஸாண்டர் தெரிவித்ததாவது:-

இங்குள்ள நிலை குறித்து தென்னிலங்கையில் நாம் கேள்விப்பட்டதற்கும், இங்கு உண்மையில் நாங்கள் கண்டவற்றுக்கும் இடையில் பெரும் வித்தியாசம் உண்டு.

விடுதலைப் புலிகள் பற்றியும், தமிழ் மக்களின் நிலை பற்றியும் தெற்கில் உள்ள சிங்கள மக்களுக்கு தவறான ஓர் எண்ணமும், பார்வையும் கற்பிக்கப்படுகின்றன; உண்மை நிலை திரிக்கப்படுகின்றது; தப்பபிப்பிராயங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



அப்ப... மழை மாரி முடிஞ்சதும் ஷெல் மாரி பொழியத் திட்டம் போடுகினமோ...?!

## ஆயர்கள் சார்பில் தீர்வுக்கு யோசனை!

யாழ்ப்பாணம், ஜன. 25

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான யோசனை ஒன்றைக் கத்தோலிக்க ஆயர்கள் இணைந்து தயாரித்து நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த கத்தோலிக்க திருச்சபையின் நல்லெண்ணத் தூதுக்குழுவைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார். (உ-3)

## தாக்குதல் தவிர்க்கமுடியாதது என்கிறார் இராணுவ அதிகாரி

கொழும்பு, ஜன. 25

யாழ். குடாநாட்டில் பாரிய தாக்குதல் ஒன்று நடத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாகும் என்று கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

வியாழக்கிழமை நடந்த செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்கு முன்கண்டவாறு பதிலளித்த அவர், மேற்கொண்டும் விவரங்களை வெளியிட மறுத்துவிட்டார். (இ-எ)

## மழைகாலம் முடிந்ததால் தாக்குதல் தீவிரமாகுமாம்!

### பிரதமர் சபையில் தெரிவிப்பு

மழைக்காலம் அகன்று வருவதால் யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்.

பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-எ)

## வட, கிழக்கு அகதிகளுக்கு பிரிட்டிஷ் அரசு நிதி உதவி

வடக்கு - கிழக்குப் பகுதி முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளின் பராமரிப்பிற்குத் தேவையான அவசர மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் 38 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை யுனிசெப் நிறுவனத்தினூடாக வழங்கியிருக்கிறது.

கடந்த ஆண்டிலும் வடக்கு கிழக்கு பகுதி அகதிகளுக்கென இது போன்ற நிதி உதவியை பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கியிருந்தது. [ஒ-எ]

## 408 தபால் பொதிகள் வந்தன திங்களன்று விநியோகம்

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமாரி' கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் 408 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன. இந்தப் பொதிகள் இன்று கப்பலில் இருந்து இறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு, நாளை மறுதினம் விநியோகிக்கப்படும் எனத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரிசி, மா, சீனி, பருப்பு உட்பட 2 ஆயிரத்து 650 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களும் "குமாரி" கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. [உ-3-165]

## மூதூரில் 6 தமிழர் சுட்டுக் கொலை!

திருகோணமலை மாவட்டம், மூதூரில் கடந்த செவ்வாயன்று ஸ்ரீலங்காப் படையினர் நடத்திய வெறியாட்டத்தில், சம்பூர் வாசிகள் அறுவர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மூதூர், சம்பூரில் படையினரால் கைது செய்யப்பட்ட ஆறு தமிழர்களும் கைகள் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த அறுவரும் 20 க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதையுடைய இளைஞர்கள் ஆவர்.

கொலையுண்ட அறுவரில் ஒருவரின் சடலம் அடையாளம்காணமுடியாதவாறு, உருக்குலைந்து போய்க் காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

படுகொலையான ஏனைய ஐவரும் வருமாறு:

வைரமுத்து யோகநாதன், வீரசிங்கம் அரசமணி, கனகு சிவபால், இராசலிங்கம் ரவிநேசன், செல்லையா யோகேஸ்வரன்.

இதேசமயம், சுந்தரம் பிள்ளை அருந்தவம் [60வயது] என்ற முதியவர், படையினரின் மோசமான தாக்குதல்களுக்கு இலக்கானார். இவர் படுகாயமுற்ற நிலையில், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ஒ]

## திருமலையில் தமிழர் மீது மோசமான தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜன. 25

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீதான படையினரின் கெடுபிடிகள் கடந்த நான்கு தினங்களாக தீவிரமடைந்துள்ளன.

தமிழ்க் கிராமங்கள் அடிக்கடி சுற்றிவளைக்கப்படுகின்றன. அங்குள்ள மக்கள் கண்டபடி தாக்கப்படுகின்றனர்; மிக மோசமான முறையில் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

கடந்த புதனன்று 58 ஆம் கட்டை, மல்லிகைத்தீவு, மணற்சேனை, வட்டத்திடல், பச்சனூர் ஆகிய தமிழ்க் கிராமங்கள் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

அப்பகுதிகளில் இருந்து சுமார் நூறு பேர் வரையில் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். பின்னர் அவர்களில் 40 பேர் மட்டும் விடுவிக்கப்பட்டனர் என்றும் ஏனையோர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [ஒ]

## எழுதுவினைஞர் தெரிவுக்கு 15 இல் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள அரச செயலகங்களுக்கு எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 15 ஆம் திகதி நடைபெறும்.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்கள், அனுமதி அட்டைகள் நேற்று யாழ். வந்து சேர்ந்தன.

யாழ். அரச அதிபரும், பிராந்திய கல்விப் பணிப்பாளரும் இணைந்து இந்தப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் இப் பரீட்சைக்கு தோற்றும் 3 ஆயிரத்து 200 பரீட்சார்த்திகளுக்காக நகரப் பகுதியில் 16 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்றும்—

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அடுத்த மாதம் எட்டாம் திகதிக்கு முன்னர் அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படும் என்றும் பிராந்திய [illegible] திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [உ-3-100]

## ஐ. நா. மனித உரிமை குழு ஸ்ரீலங்கா மீது கண்டனம்!

லண்டன், ஜன. 25

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் பெருமளவில் மீறப்படுவதாகத் தெரிவித்து, ஸ்ரீலங்கா அரசைக் கண்டிக்கும் அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கண்காணிப்புக் குழு அடுத்த வாரம் வெளியிடவிருப்பதாக அறிய வருகிறது.

ஸ்ரீலங்காவில் ஆட்கள் காணாமற் போவது குறித்து ஐ. நா. தயாரித்த அறிக்கை அடுத்த வாரம் ஐ. நா. மனித உரிமை கண்காணிப்புக் குழுவின் பரிசீலனைக்கு — விவாதத்துக்கு வரவிருக்கிறது.

ஆட்கள் காணாமற் போகும் நிலை உலக நாடுகளில் ஸ்ரீலங்காவில் தான் மிக உச்சமாக—மோசமாக— இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதாக இப்போது தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த விவகாரம் குறித்து ஐ. நா. மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் பிரிட்டனும், ஹொலந்தும் — ஸ்ரீலங்காவுக்கு எதிராக — பல்வேறு கேள்விகளை எழுப்பவிருப்பதாகவும் அறிய வருகிறது.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசுப் படைகளினால் கைது செய்யப்பட்ட 12 ஆயிரம் பேர், பின்னர் காணாமற் போயிருப்பதாகவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது என்றும் —

ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஆட்கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து காணப்பட்ட போதிலும், மனித உரிமைகளை நிலை நிறுத்தும் ஸ்ரீலங்கா அரசின் முயற்சியில் ஓரளவு அபிவிருத்தி தென்படுகின்றது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதாம்.

ஐ. நா. மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள் கடந்த அக்டோபரில் ஸ்ரீலங்காவுக்கு வருகைதந்து— 12 நாட்கள் தங்கியிருந்து — பல்வேறு தரப்பினரையும் சந்தித்து — மனித உரிமை மீறல்கள் பற்றிய விவரங்களை நேரில் கண்டறிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழ அகதிகள் விவகாரம்; ஐ. நா. அமைப்பு ஆராயும்

லண்டன், ஜன. 25

தமிழ்நாட்டிலிருந்து ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது குறித்து ஐ. நா. மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு ஆராயவிருக்கிறது.

இலங்கை விவகாரம் குறித்து இந்தக் குழு அடுத்த வாரம் கூடி ஆராயும்போது ஈழ அகதிகள் விவகாரமும் அதில் முக்கிய இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈழ அகதிகளை திருப்பியனுப்புவதால் உருவாகும் அரசியல் மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து ஐ. நா. குழு விரிவாக ஆராயும்.

திருப்பியனுப்பப்படும் அகதிகளை தமிழகத்தில் வைத்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் அதிகாரிகள் சந்தித்துப் பேசவும்—

அவர்கள் உண்மையில் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரிலேயே தாயகம் திரும்புகிறார்களா என்பதை அந்த அதிகாரிகள் கண்டறியவும்—

வாய்ப்பளிக்கப்படாதது குறித்து ஐ. நா. மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்படும் என்று கூறப்படுகிறது. [உ-5]

### ஒற்றுமை யாத்திரையால்

## ஜம்மு - காஷ்மீரில் பதற்றம்! ஸ்ரீநகரில் ஊரடங்குஉத்தரவு!!

புதுடில்லி, ஜன. 25

பாரதீய ஜனதாக் கட்சியினர் நடத்தும் ஒற்றுமை யாத்திரை ஜம்மு—காஷ்மீர் பகுதியை அடைந்திருக்கும் வேளையில் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் நேற்று முதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

கன்னியாகுமரியில் ஆரம்பிக்கப்பட்ட ஒற்றுமையாத்திரை நேற்று காஷ்மீர் மாநிலத்தில் உள்ள ஜம்முநகரைச் சென்றடைந்தது.

ஜம்முவிலிருந்து பாரதீய ஜனதா தொண்டர்கள் இன்று காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகர் நோக்கிப் புறப்படுவர் என்றும்—

அங்கு நாளை — குடியரசு தினமன்று—இந்திய தேசியக் கொடியை அவர்கள் ஏற்றுவார்கள் என்றும் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஸ்ரீநகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதால் ஒற்றுமை யாத்திரை ஸ்ரீநகருக்குள் பிரவேசிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதற்கிடையில்—

ஸ்ரீநகரில் உள்ள பொலீஸ் தலைமைக் காரியாலயக் கட்டடத்தின் மீது தீவிரவாதிகள் குண்டுத் தாக்குதலை நடத்தினர் என்றும் அதில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### யாழ். ஆஸ்பத்திரியின்

## கழிவு அகற்றும் விவகாரம்; செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். ஆஸ்பத்திரி மலசல கழிவை அகற்றுவது தொடர்பான திட்டத்தை உடனடியாக செயற்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கூட்டம் ஒன்றைக் கூட்டியுள்ளார்.

மாநகர சுகாதாரப் பகுதி, யாழ். ஆஸ்பத்திரி, கட்டடத் திணைக்களம் ஆகியவற்றின் அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர். நாளை மறுதினம் யாழ். செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும். (ஒ-3)

## குடாநாட்டில் 110 ஆசிரியர் 1 ஆம் திகதி முதல் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 25

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் அதிபர்கள் உட்பட 110 ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்துக்குள் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள்.

இடமாற்றம் பெறுவோரின் பட்டியலைத் தயாரிப்பதற்காக இடமாற்றசபை நேற்றுக் கூடியது.

இந்தச் சபையில் ஆறு கல்விக் கோட்ட அதிகாரிகளும், தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதி ஒருவரும், யாழ். கல்வி அலுவலக நிர்வாக அதிகாரி ஒருவரும் இடம்பெறுகின்றனர். வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் சபைக்குத் தலைமை வகித்தார்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இடமாற்ற சபை நேற்றுக் கூடியது குறிப்பிடத்தக்கது. (உ-3-5)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் 3ஆவது 'எய்ட்ஸ்' நோயாளி!

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்.குடாநாட்டில் மூன்று "எய்ட்ஸ்" நோயாளிகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் இன்னமும் நம் மத்தியில் வசித்து வருகிறார்.

இத்தகவலை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் டாக்டர் வி.எஸ். நச்சினார்க்கினியன் வெளியிட்டார்.

நேற்று யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற "இன்ரறக்ட்" பரிசளிப்பு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

"யாழ். மாவட்டத்தில் 'எய்ட்ஸ்' நோய் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருகின்றன. இது விடயத்தில் இளைய தலைமுறையினர் விழிப்பாக இருக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மாணவர்களுக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆண்டு மூன்றுக்கும் இனி ஆங்கில பாட போதனை

இந்த வருடம் முதல் ஆண்டு மூன்றில் பயிலும் மாணவர்களுக்கும் ஆங்கில மொழி ஒரு பாடமாக்கப்பட்டிருக்கிறது.

இந்த பாடநெறி சம்பந்தமான பயிற்சி வகுப்புக்கள் கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்றன. இந்தப் பயிற்சியில் யாழ் கல்வி அலுவலக ஆங்கிலப் பிரிவு அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இதுவரை காலமும் ஆண்டு 4 வகுப்புத் தொடக்கமே ஆங்கில மொழி போதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

[450] முட்டை அடை வைக்கக்கூடிய [Incubator] கருவி விற்பனைக்கு. விலை ரூபா 4200/- நூற்றிஐம்பது முட்டை விதம் பிரித்தும் வைக்கலாம்- மண்எண்ணெய்க்கும் இலகுவாக மாற்றலாம். கனகர் றேடேர்ஸ், பேப்பர் கடை, திருநெல்வேலிச்சந்தி.
(19444)

நல்ல இன (Komouri X Jamnapari) பால் ஆடு, 10 நாள் ஆண்குட்டி, ஒரு போத்தல் பால் தற்சமயம். விவரம்: இராசசிங்கம், தபாற்கந்தோர் ஒழுங்கை, உரும்பராய்.
[19442]

## மணமக்கள் தேவையா?

எம்மிடம் உள்நாட்டு ஆண்களும், வெளிநாட்டு மணப்பெண்களும் ஏராளமாக இருக்கிறார்கள். மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோருக்கும், விரும்பாதோருக்கும் புரிந்துணரக் கூடிய முறையில் திருமணம் செய்து வைக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.
[19452]

## மணமகள் தேவை

தற்போது விடுமுறையில் நிற்கும் மணமகன் வயது 34 பிரான்சில் 14 வருடங்களாக தொழில் புரிபவர். நட்சத்திரம் ரோகினி, இரகபாவம் 4 செவ்வாய் பாவம் 8 ஜாதகம். படத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: A. C. மகேந்திரன், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
[19437]

## அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[சி/1256]

## மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம்.
[சி-1409]

## புதிய நாவல்

1992 இல் வெளிவந்துள்ளது. "ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்" திக்கொன்றாய் பறக்கும் சகோதரப் புறவைகளின் சோகராகம் இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது, மானம் உயிர்க்கிறது.
[14958]

## அம்பாள் திருமண சேவை

B. Sc. ஆசிரிய மணமகனுக்கு கொழும்பில் வேலை செய்யும் மணப்பெண்ணும், I. C. M. A. கணக்காளரான சைவ மணமகனுக்கு பட்டதாரி மணப்பெண்ணும், B. A. Hons. விரிவுரையாளருக்கும் வங்கி உத்தியோகத்தர், சைவ மணமகனுக்கு A/L மணப்பெண்ணும் தேவை. ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முற்பணம் ரூபா 50/- சின்னச்சாமிக்குருக்கள் சண்முகஐயர், வீரமாகாளி அம்மான் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
[19438]

## புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1186)

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு - 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை எமது நிலைய மாணவர்களுக்கு 26-1-92 ஞாயிறு மு. ப. 8-00 மணிக்கு நடைபெறும். ஒவ்வொரு மாதத்திலும் மூன்றாவது ஞாயிறு நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(19463)

---

Personal

## New Science Centre

எழிலகம் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**இரசாயனவியல்**

திரு. செல்வா B. Sc. (Hons)

★ புவி வளம் ★

ஆரம்பம்: 25-1-1992 சனிக்கிழமை 4-30 p.m.

**A/L - MATHS**

திரு. குணசிங்கம் B. Sc. (Hons)

நேர அட்டவணை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
(சி, 1420)

---

## தொண்டாவிடம் கோரிக்கை

நாடாளுமன்றத் தெரிவுக் குழு கேட்டுக் கொள்ளாத பட்சத்தில் உத்தேச யாழ்ப்பாண விஜயத்தைக் கைவிடும்படி அமைச்சர் தொண்டமானை ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் கேட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமானின் யோசனைகளைக் குறை கூறும் அரசியல்வாதிகளையும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டித்துள்ளது.
[த-எ]

---

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை.

## 1992 வருடாந்தப் பொதுக் கூட்டத்துக்கான அறிவித்தல்

மேற்படி கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 29-03-1992 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு, யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். கிளையின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 அங்கத்துவப் பிரதிநிதிகள் (இப்பிரதிநிதிகள் வராதவிடத்து அவர்களுக்காக வருகை தரும் பிரதிநிதிகள்) மாத்திரமே இக்கூட்டத்தில் பங்கு பற்றலாம். இப்பிரதிநிதிகளின் பெயர்களைப் பிரிவுத் தலைவர்கள் 01-03-1992 க்கு முன்பாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

செயற்குழு உறுப்பினர் தெரிவுக்கான நியமனங்களும். தீர்மானங்களும் 07-03-92 முதல் 21-03-92 பிற்பகல் 4.00 மணி வரை எமது பணிமனையில் ஏற்றுக் கொள்ளப்படும். (இதற்கான படிவங்களை எமது பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.)

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
23 - 01 - 1992
[சி-1358]

---

# ஸ்ரீ சாரதா சேவாச்சிரம

## இருபதாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள்

**26 - 01 - 1992 ஞாயிறு**

காலை 9 மணி முதல் 12 மணி வரை

சுவாமி விவேகானந்தரின் பிறந்த தின நிகழ்ச்சிகள்

- ★ விசேட பூஜை, வழிபாடு
- ★ வசதி குறைந்த தாய்மார்கள் 50 பேருக்கும், 50 பெண் குழந்தைகளுக்கும் உடுபுடைவைகள் அன்பளிக்கும் வைபவம்.
- ★ 23-06-1991 உதயன் பத்திரிகையில் வெளிவந்த எமது விளம்பரத்தின் பிரகாரம் விண்ணப்பித்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வைபவம்.

**31 - 01 - 1992 வெள்ளி:**

காலை 8-30 மணி முதல் நண்பகல் 12-30 மணி வரை

சுவாமி விவேகானந்தர் பிறந்த தின நிகழ்ச்சிகள்

- ★ விசேட பூஜை, வழிபாடு.
- ★ கருத்தரங்கு (உயர்தர மாணவருக்கும், ஆசிரியருக்கும் மட்டும்)

★ சுவாமி விவேகானந்தரும் அவரது மானுடமும் ★

பங்கு பற்றுவோர்:

திரு. க. சண்முகநாதன் [செயலாளர், நகரசபை, பருத்தித்துறை]
டாக்டர் செ. முருகானந்தன் M.B.B.S. (Cey)
சுவாமி சித்ரூபானந்தா

ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம்.

பருத்தித்துறை.
[சி-1359]

---

திருவள்ளுவர் சனசமூக நிலையம்

அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் அவர்களின் 6ஆவது ஆண்டு நினைவாக

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

எமது முன்னாள் பொருளாளர் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் அவர்கள் ஞாபகார்த்தமாக ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நடத்த இருக்கின்றோம். இப்போட்டிகளில் யாழ் மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் நேரடியாக 05-02-1992 க்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

செயலாளர்.

432/2 மடம்வீதி,
யாழ்ப்பாணம்.
[19465]

---

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**திருமேனி ஐயாத்துரை**
[முன்னாள் பிரதம சுகாதாரப் பரிசோதகர்]

மலர்வு: 02 — 12 — 1911
மறைவு: 25 — 01 — 1990
திதி: 02 - 02 - 1992

இப் பூவுலகை விட்டு மறைந்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகும் இன்று, அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி,
மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

'கணேசபதி',
ஆர். கந்தையா வீதி,
சாவகச்சேரி.
[19418]

---

# திருமறைக் கலா மன்றம்

## நடத்தி வரும் தொடர் நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 25-1-92 | சித்திரக் கருத்தரங்கம் | மாலை | 5-00 மணி |
| 26-1-92 | இசைக் கச்சேரி | ,, | 6-45 மணி |
| 27-1-92 | பொது அறிவுப்போட்டி | ,, | 5-00 மணி |
| 28-1-92 | "பண்பாடு" கருத்தரங்கம் | ,, | 5-00 மணி |
| 29-1-92 | சைவசித்தாந்த வகுப்பு ஆரம்பம் | ,, | 4-30 மணி |
| 30-1-92 | இலக்கிய அவை | ,, | 5- மணி |
| 31-1-92 | சிறுவர் கலைக்கூடம் ஆரம்பம் | ,, | 4-30 மணி |

இடம் மன்றக் கேட்போர் கூடம்

ஆர்வலர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

கௌரவ செயலாளர்
திருமறைக் கலா மன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/1357]

---

அரசாங்க

# எழுதுவினைஞர் பரீட்சை

பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

**10** தினங்கள் மட்டும்.

- ★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
- ★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
- ★ நாளாந்தக் கட்டணம் ரூபா 20 மட்டுமே

**இன்று ஆரம்பம்:** முற்பகல் 10-30

பாடநெறி:- மொழித்தேர்ச்சி, உளச்சார்பு.

போட்டியில் வெற்றி பெற ஓர் அரிய சந்தர்ப்பம்!

# அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
[சி-1415]

---

## 3 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



**அமரர் ஆறுமுகம் கார்த்திகேசு**
[இளைப்பாறிய சங்கீத ஆசிரியர்]

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இவர் 23-1-92 வியாழக்கிழமை சாலை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. ஆ. ஆறுமுகம் தம்பதிகளின் புதல்வனும், வீரலட்சுமியின் அன்புக் கணவரும் நாகம்மா, சிவக்கொழுந்து, தங்கராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், விவேகானந்தனின் [ஆனந்த றேட்ஸ், நாவலடி] அன்புத் தந்தையும், புவனேஸ்வரியின் அன்பு மாமனும், தியாகராசா, வைத்திலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆனந்தராஜன், ஆனந்தசிவம், ஆனந்தகுமார், ஆனந்தரமேஷ் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 23-1-92 வியாழக்கிழமை நடைபெற்றன. அன்னாருக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

கா. விவேகானந்தன் (மகன்)
குடும்பத்தினர்.

நாவலடி,
அல்வாய்.
(19464)

---

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்: 05 — 06 — 1905



மறைவு: 28 — 10 — 1991

**அமரர் கனகரத்தினம் காசிப்பிள்ளை**
[புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி, கந்தசாமி கோவில் தர்மகர்த்தா]

இன்று [25 - 01 - 1992] சனிக்கிழமை பகல் 11 மணியளவில் வீட்டுக்கிருத்தியம் எமது இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராகச் சமூகம் தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

60, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.
[19461]

---

ஓம் விராட்விஸ்வப் பிரம்மனே நம

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 — 08 — 1943



மறைவு: 27 — 12 — 1991

அமரர்
**துரைச்சாமி சின்னத்தம்பிப் பத்தர்**
[பிரபல நகைத் தொழிலதிபர்]

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர் விட்டு எரிந்து அணைந்த ஒளி விளக்கே! - உங்கள் ஊன் உருக்கி எங்களை ஓங்க வைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (25-01-92) சனிக்கிழமை வில்லூன்றி மடத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், 26 - 01 - 1992 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

இல. 77, காரகாட்டு லேன்,
வண்ணார்பண்ணை.
[19449]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசின் புரளி!

அவசரகாலச் சட்ட அமுல் நீடிக்கப்படுவதும், அது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடப்பதும் மாதாந்த நிகழ்வுகளாகிவிட்டன. அவை குறித்து நாட்டின் எந்தப் பகுதியில் வாழும் மக்களாவது கவனத்தில் கொள்வதாக இல்லை.

பிரேமதாசா தலைமையிலான கடந்த மூன்று வருட ஆட்சியில், மிகப் பெரும்பகுதி அவசரகாலச் சட்டத்தின் கீழேயே நடந்துவருகிறது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் யுத்தம் நடப்பதால் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. அதனால் இப்பகுதிகளில் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது என்று அரசாங்கத்தரப்பினர் கூறினால் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமாகலாம்.

ஆனால் வருடக் கணக்காக வடக்கு-கிழக்கில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்ட முடியவில்லை என்றால், அரசு பலவீனமானது என்பது தானே அர்த்தம்! அது மட்டுமல்ல தமிழர் தாயகத்தில் அரசின் ஆணை செல்லுபடியாகவில்லை என்றே கொள்ளவேண்டும். இது அரசாங்கத்தின் தோல்வியையே காட்டுகிறது!

இந்தப் பெரிய உண்மையை ஜனாதிபதியோ, அமைச்சர்களோ ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஒப்புக்கொண்டால் வடக்கும் - கிழக்கும் தமிழர்களின்— தமிழீழ விடுதலைப் புலிகளின் — ஆணைக்கு உட்பட்ட பிரதேசங்கள் என்பதை ஏற்றுக்கொண்டதாக் விடும். அதனாலேயே யுத்தம் நடத்தி இராணுவ ஆதிக்கத்தை நிலைநாட்டி, அதன் மூலம் தமிழ்ப் பகுதிகளில் அரசின் ஆணையைச் செல்லுபடியாக்க முயற்சி செய்கிறார்கள்!

தென்னிலங்கையிலும் அரசினால் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட முடியவில்லை. சாதாரண சட்டங்களின் பிரகாரம் தெற்கிலும், மேற்கிலும், மத்திய மலைநாட்டிலும் அமைதியான சூழ்நிலையைப் பேண முடியும் என்ற துணிவு அரசுக்கு இருக்குமானால் அங்கெல்லாம் அவசரகாலச் சட்டம் அமுல் செய்யப்படுவது- நீடிக்கப்படுவது— ஏன்?

அப்பகுதிகளில் ஆட்சியைத் தொடர, அவசரகால நிலை உருவாக்கப்படவேண்டியுள்ளது. அரசாங்கத்துக்கு எதிரான கருத்துள்ளவர்களை பழிவாங்குவதற்கு, மறைமுகமாகத் தண்டிப்பதற்கு அவசரகாலச் சட்டம் தேவைப்படுகிறது!

அந்தத் தேவையின் பாற்பட்ட புதிய கண்டுபிடிப்பே தோட்டப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகள் ஊடுருவிவிட்டார்கள் என்று அமைச்சர் வின்சென்ட் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவிக்கும் தகவல். பாதுகாப்புப் படையினரும், அவர்களுக்குப் பக்கத் துணையாக விளங்கும் தென்னிலங்கைப் பத்திரிகைகளும் வெளியிட்ட ஊகங்களை உறுதி செய்வதற்கான ஒப்புதலாகும்.

மலையகத்தில் புலிகள்- என்று சிங்கள மக்களுக்கு கிலி காட்டி, அவசரகாலச் சட்டத்தையும் வேண்டுமானால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் சேர்த்து நடைமுறைப்படுத்தி, இராணுவம், பொலிஸ் ஆகியவற்றின் துணையோடு தென்னிலங்கை மக்களையும் அடக்கி ஆள்வதே நோக்கம்.

இந்த உள்ளார்த்தம் புரியாமல் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மலையகத்தில் 'புலி, புலி' என்று ஒலமிடுகிறார்கள். வடக்கு - கிழக்குத் தமிழர்களை அடக்கி ஆள முனைவது போல, மலையகத் தமிழர்களையும் அடிமைப்படுத்த அரசாங்கத்தோடு ஒத்து ஊதுகிறார்கள்.

இந்த அரசியல் வினைகள் பொல்லாத விளைவுகளைத் தரும் என்று புரிந்துகொள்ளக் கூடிய அரசியல் பக்குவம் அங்குள்ள அரசியல்வாதிகளுக்கு எப்போது வரப்போகிறது? புலி, புலி என்று கத்திப் புரளி செய்த இடையனை ஒரு நாள் புலியே வந்து விழுங்கிய கதையையாவது இவர்கள் ஞாபகப்படுத்திப் பார்ப்பார்களா? இல்லாத ஒன்றை நடப்பதாக புரளி செய்பவன் அதனாலேயே பாதிக்கப்படுவது தான் இயற்கை!!

### ஸ்ரீ தியாகராஜ உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவினர் ஸ்ரீ தியாகராஜ உற்சவத்தினை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இது தொடர்பான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இன்று காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். என். கே. பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வர இசையும், அதனைத் தொடர்ந்து நுண்கலைப் பீட மாணவர்கள் மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். அன்றும் பிரபல கலைஞர்களின் இசைக் கச்சேரிகள் இடம் பெறும். (த)

### இருவர் தேடப்படுகின்றனர்

வவுனியா மாகாணம் எல்லைப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இரட்டைக் கொலை மற்றும் பத்து லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவம் தொடர்பாக நாகேஷ், விஷ்ணு என்ற இருவரையும் பொலீஸார் தேடி வருகின்றனர் என அறிவிக்கப்படுகிறது.

### அறிவியல் கருத்தரங்குகள்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தி வரும் அறிவியல் கருத்தரங்குகள் எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 1-00 மணிக்கு பின்வரும் மூன்று பாடசாலைகளில் நடைபெறும்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி— 'காலத்தால் பிந்திய எமது தமிழ்க் காவியங்கள் மூடத்தனத்தைப் பரப்புகின்றனவா?' — திரு. ஜெயராஜ் [அமைப்பாளர் கம்பன் கழகம்].

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்— 'அபிவிருத்தியும் குடியேற்றமும்'— திரு. இரா. சிவச்சந்திரன் [சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக் கழகம்].

அராலி இந்துக்கல்லூரி — 'ஐரோப்பியர் வருகையும் காலனி ஆதிக்கமும்'— திரு. சத்தியசீலன் [சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்]. [இ]

### இ. தொ. கா. - ஐ. தே. க. பிளவுபடுத்த முயற்சி

கொழும்பு, ஜன. 25

ஐக்கிய தேசியக் கட்சியையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் பிரித்து விட சில சக்திகள் முயற்சி செய்கின்றன.

இப்படி துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

திரு. தொண்டமானை அமைச்சரவையில் இருந்து வெளியேற்றுங்கள் என்ற கோஷம் எழுப்பப்பட்டு வருகிறது. இதன் மூலம் இருகட்சிகளையும் பிரிக்கலாம் என்று சில சக்திகள் எதிர்பார்க்கின்றன. இம்முயற்சி வெற்றி பெறாது என்றும் அவர் சொன்னார்.

### அரபு பிரதேசங்களை ஒப்படைக்கச் சீனா கோருகிறது

பீகிங், ஜன. 25

தாம் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களை பலஸ்தீனியரிடம் இஸ்ரவேல் ஒப்படைத்து விட வேண்டும் என்று சீனா நேற்று அறிவித்தது.

சீனாவும், இஸ்ரவேலும் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவிருக்கின்றன.

அதற்கு முன்னோடியாக பூர்வாங்க ஒப்பந்தம் ஒன்றில் இரு நாடுகளும் கைச்சாத்திடவுள்ளன.

### 4 பொலீஸார் கைது!

அனுராதபுரம், ஜன. 25

அனுராதபுரம் மாவட்டம் யான் ஓயாவில் ஈ. எம். திலகரட்ண என்பவர் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது தொடர்பாக கலென்பிந்துனுவெவ பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த 4 பொலீஸார் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். கொலைக்கு உபயோகிக்கப்பட்டதாகக் கூறப்படும் ரி—56 ரக ரைபிள் ஒன்றும் குற்றத் தடுப்பு பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது (உ-10)

### வயிற்றோட்டத்தினால் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். குடாநாட்டில் பல இடங்களிலும் பரவி வரும் வயிற்றோட்ட நோய் காரணமாக நேற்றும் இருவர் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமாயினர்.

இறந்த இருவரும் வலிகாமம் மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர். சுழிபுரம் காளுவனைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஜெனீற்றா என்ற ஒரு வயதுச் சிறுமியும் பொன்னாலையைச் சேர்ந்த எம். சுலோ ஜனா (வயது 22) என்ற இளம் பெண்ணுமே மரணமானவர்களாவர். (உ-15)

### விபத்துச் சம்பவங்கள்: 2 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 25

நாவற்குழி பிரதான வீதியில் நேற்று இடம் பெற்ற லொறி—சைக்கிள் விபத்தில், சைக்கிளில் சென்ற 14 வயதுச் சிறுவன் தலையில் படுகாயமடைந்தான்.

நாவற்குழியைச் சேர்ந்த சகாயநாதன் றொபின்சன் (வயது 14) என்ற அந்தச் சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் சுயநினைவிழந்த நிலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இதேசமயம்—

பருத்தித்துறை இறங்கு துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி விபத்தில் அங்கு கடமையில் இருந்த உத்தியோகத்தர் ஒருவர் சிக்கி காயமடைந்தார்.

காயமடைந்த கணபதிப்பிள்ளை— கோவிந்தபிள்ளை [47 வயது] என்ற அந்த உத்தியோகத்தர் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

# சோவியத் மறைவு தெற்காசியாவை அணு ஆயுத ஆபத்துக்குள் தள்ளுமா?

இம் மாதம் 31 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் தலைமை அலுவலகத்தில் முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெறவிருக்கின்றது.

பதினைந்து உலகத் தலைவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொள்கின்றனர். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் பதினைந்து உறுப்பு நாடுகளின் தலைவர்களே இவர்கள் ஆவர்.

47 ஆண்டுகளுக்கு முன்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பை தோற்றுவித்த ஸ்தாபக நாடுகள் என்ற பெருமையைப் பெற்ற நாடுகளில் ஒன்றின் தலைவர் மட்டும் இச்சந்திப்பில் கலந்து கொள்ளப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது. காரணம் அந்த நாடு கடந்த ஆண்டுடன் உலக அரங்கில் இருந்து மறைந்து விட்டது. என்றாலும் சரித்திரத்தில் அழியா இடம்பெற்ற அந்த நாட்டின் பெயர் சோவியத் யூனியன்.

> பாகிஸ்தானிடம் அணுகுண்டு இருப்பதாக அண்மையில் அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்தது.
>
> இந்தியா, பாகிஸ்தான், இலங்கை உட்பட ஏழு நாடுகள் கொண்ட தெற்காசியப் பிராந்தியம் தொடர்பாக இதுவரை தாம் கடைப்பிடித்து வந்த வெளியுறவுக் கொள்கையை இதன் மூலம் அமெரிக்கா மாற்றிக் கொண்டது.
>
> அமெரிக்காவின் புதிய கொள்கை ஆசியாவை அணு ஆயுத ஆபத்து சுற்றி வளைத்திருப்பதாக எச்சரிக்கிறது. இது பற்றிய கண்ணோட்டத்தை இங்கே வாசியுங்கள்.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்றாக சோவியத் யூனியன் விளங்கி வந்தது. ஆனால் உலக அரங்கில் அந்த நாடு நிரந்தரமாக விளங்க முடியாத நிலையை, அந்த நாட்டில் ஏற்பட்டு வந்த அரசியல் மாற்றங்கள் உருவாக்கி விட்டன.

சோவியத் யூனியனின் மறைவை அடுத்து அங்கு தோன்றிய பதினைந்து நாடுகளில் மிகப் பெரியது 18 கோடி மக்களைக் கொண்ட ரஷ்யா ஆகும்.

ஐக்கிய நாடுகள் 'பாதுகாப்புச் சபையில் சோவியத் யூனியன் வகித்து வந்த நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்து இப்போது ரஷ்யாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல — இதுகால வரை சோவியத் யூனியன் வகித்து வந்த அணு வல்லரசு என்ற பெயரையும் ரஷ்யா பெற்றுள்ளது.

#### ஐ. நா. வரலாற்றில் முதல் சம்பவம்

ஸ்தாபக நாடு ஒன்று மறைந்து, அந்த இடத்திற்கு, புதிதாக உலக அரங்கில் தோன்றிய ஒரு நாடு, மறைந்த நாட்டின் அதே அந்தஸ்து, புகழுடன் இடம் பெறுவது ஐக்கிய நாடுகள் சபையின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாகும்.

ஆம், ஐக்கியநாடுகள் என்ற அமைப்பின் அவசியம் 1942 இல் உலக நாடுகளால் உணரப்பட்டது. அதன் பலனாக 1942 இலேயே ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு முன்னோடியாக லீக் ஒப் நேஷன் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆகவே ஐ. நா. சிந்தனை தோன்றிய ஐம்பதாவது (பொன்விழா) ஆண்டில் புதிய வல்லரசான ரஷ்யாவின் தலைவரை வரவேற்கும் சரித்திர நிகழ்வாக ஜனவரி 31 சந்திப்பு அமையப் போகின்றது.

இச்சந்திப்பு உலக அரங்கில் ஏற்படுத்தப்போகும் மாற்றங்கள் எப்படி இருக்கும்? இதனைப் பல கோணங்களில் உலக அவதானிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

#### மேற்கு ஆசியா

கடந்த ஆண்டு உலக அரங்கில், மேற்கு ஆசியாவில் இடம் பெற்ற வளைகுடா யுத்தமும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது.

மேற்கு ஆசியாவில் ஈராக் அணு ஆயுத நாடாக உருவெடுத்து வந்தது. அணு ஆயுதங்கள் இரசாயன மற்றும் நுண்ணுயிர்க் கிருமி ஆயுதங்களை பெரும் எண்ணிக்கையில் ஈராக் உற்பத்தி செய்து குவித்து வந்தது. ஈராக் ஓர் அணு ஆயுத நாடாக உருவெடுப்பது மேற்காசியப் பிராந்தியத்தில் தனது நலன்களைப் பேணும் அரபு நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று அமெரிக்கா எண்ணியது.

## அணு ஆயுதங்களுடன் பிறந்த புதிய இஸ்லாமிய நாடுகள்!

அந்த எண்ணத்துக்கு உரமூட்டுவது போன்று ஈராக் குட்டி நாடான குவைத்தைப் பிடிக்க, அமெரிக்கா தனது நீண்ட நாளைய திட்டத்தை வளைகுடா யுத்தம் மூலம் நிறைவேற்றியது.

ஐக்கிய நாடுகள் சபையைப் பயன்படுத்தி அமெரிக்கா ஈராக்கிடமிருந்த அணு ஆயுதங்களை அழித்தது. ஆனால் ஈராக்கின் அணு ஆயுதத்திறன் அழிக்கப்பட்டதா என்ற விஷயத்தில் இன்னும் சந்தேகம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த நிலையில் சோவியத் யூனியனின் மறைவுடனும், மத்திய ஆசியாவில் பதினைந்து புதிய நாடுகளின் தோற்றத்துடனும் 1991 ஆம் ஆண்டு மறைந்தது.

#### மத்திய ஆசியா

மத்திய ஆசியாவில் தோன்றிய பதினைந்து புதிய நாடுகளில் ஒன்பது முஸ்லிம் நாடுகள் ஆகும்.

சோவியத் யூனியன் என்ற ஒரு நாட்டின் வல்லரசிடம் மொத்தமாக இருந்த அணு ஆயுதங்கள் புதிய பதினைந்து நாடுகளிடமும் சிக்கிக் கொண்டன. அணு ஆயுதங்களின் எண்ணிக்கை நாட்டுக்கு நாடு வேறுபட்டிருப்பினும், கூடுதலான அணு ஆயுதங்களை ரஷ்யாவும், உக்ரைனும் சொந்தமாக்கிக் கொண்டுள்ளன.

ஆகவே மேற்காசியாவில் முஸ்லிம் நாடு எதுவிடமும் அணு ஆயுதங்கள் இருக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்ற அமெரிக்காவின் திட்டம், மத்திய ஆசியாவில் பிறக்கும் போதே அணு ஆயுதங்களுடன் பிறந்த இஸ்லாமிய நாடுகளிடம் தோல்வி கண்டு விட்டது என்றுதான் கூறவேண்டும்.

அணு ஆயுதங்கள் மட்டுமல்ல, அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் ஆற்றல் படைத்த விஞ்ஞானிகளும் இப் பதினைந்து நாடுகளிடமும் சிக்கிக் கொண்டு விட்டார்கள். இதுவும் அமெரிக்காவுக்கு ஒரு பின்னடைவையே கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

புதிய நாடுகளில் ஒன்றான கஸகிஸ்தான் என்ற இஸ்லாமியக்குடியரசில் அணு ஆயுத உற்பத்திக்குத் தேவையான யுரேனியம் ஏராளமாக உண்டு. அதனை அந்த நாடு ஏனைய இஸ்லாமிய நாடுகளுக்கு விற்கும் ஆபத்தும் உருவாகியிருப்பதாக அமெரிக்க உளவு நிறுவனம் எச்சரித்திருக்கிறது.

கூடிக் கழித்துப் பார்த்தால்- அணு ஆயுதங்களை உற்பத்தி செய்ய தேவையான யுரேனியம் மற்றும் தொழில் நுட்ப வசதிகளுடன் அணு விஞ்ஞானிகளும் இஸ்லாமிய மற்றும் அரபு நாடுகளுக்கு தங்கு தடையின்றி கிடைக்கும் வாய்ப்பு என்றுமில்லாத அளவு அதிகரித்திருப்பது உண்மையே.

- தீபன்ராஜா -

(வளரும்)

### அதிபர்களின் அசமந்தப் போக்கினால் மாணவரின் உணவு முத்திரை தாமதம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள் சிலர் மாணவர்களின் மதிய உணவு முத்திரை அறிக்கைகளை பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிப்பதில் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதால் மாணவர்கள் தமது உணவுப் பொருள்களை உரிய நேரத்தில் பெறமுடியாத நிலைமை ஏற்படுகிறதாம்.

யாழ். செயலக அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு கடந்த ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்படவில்லை.

இது சம்பந்தமாக யாழ். செயலக அதிகாரிகளைக் கேட்டபோது அவர்கள் தெரிவித்த விவரம் வருமாறு:

பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை அவர்களின் மொத்த உச்சப் பெறுமதி ஆகியவற்றைத் தெரிவிக்கும் அறிக்கைகளை அதிபர்கள் பிரதேச செயலாளர்களுக்கு மாதா மாதம் சமர்ப்பிக்கவேண்டும்.

அந்த அறிக்கையின் அடிப்படையிலேயே மொத்த முத்திரைகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கொழும்பில் இருந்து அவற்றைக் கொண்டு வரமுடியும்.

ஆனால், பிரபல்ய பாடசாலைகள் உட்பட பெரும்பாலான பாடசாலைகளின் அதிபர்கள் இந்த அறிக்கையை உரிய நேரத்தில் அனுப்புவதில்லை.

இதன் காரணமாக மாவட்டத்தில் உள்ள ஏனைய மாணவர்களும் உரிய நேரத்தில் முத்திரையை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. [இ-3]

### கட்சிகளை விளக்கம் அளிக்க அழைப்பதற்கு தெரிவுக்குழு முடிவு

கொழும்பு, ஜன. 25

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மீண்டும் கூடியது.

சுதந்திரக்கட்சி எம். பியும் குழுத் தலைவருமான மங்கள முனசிங்கா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

இனப்பிரச்சினை சம்பந்தமாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக விளக்கமளிக்க, அந்த யோசனைகளை சமர்ப்பித்த அரசியல் கட்சிகளை வரவழைப்பது என்று தெரிவுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

''மூன்று மாத காலத்தினுள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சிபார்சுகள்'' என்ற தலைப்பில் இச்செய்தியை கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது. (த-எ)

### ஈழ அகதிகளை தாயகம் திரும்ப இந்தியா நிர்ப்பந்திக்கவில்லையாம்!

கொழும்பு, ஜன. 25

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திரும்பிச் செல்லும்படி இந்திய அரசு எந்த நிர்ப்பந்தமும் செய்யவில்லை.

இவ்வாறு தமிழ்நாடு மாநில அகதிகள் மறுவாழ்வு துறை சிறப்பு ஆணையாளர் சி. எம். ராம்தாஸ் திருகோணமலையில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தாயகம் திரும்பிய முதலாவது தொகுதி இலங்கைத் தமிழ் அகதிகளுடன் திருமலை வந்த திரு. ராமதாஸ் பின்னர் கொழும்பில் இலங்கை அரசின் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

அதன் பின்னர் அவர் புதுடில்லி புறப்பட்டுச் செல்வதாக இருந்தது. அவர் நேற்று வெள்ளிக்கிழமை புதுடில்லியில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவைச் சந்திக்க இருந்தார்.

இதே வேளை —

இலங்கைத் தமிழ் அகதிகளை ஏற்றிக் கொண்டு எம். வி. அக்பர் என்ற கப்பல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஐந்து தடவைகள் சென்னையில் இருந்து திருகோணமலைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### பரிசாரகர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளரின் நிர்வாகத்திற்குட்பட்ட பிராந்தியத்தில், ஆண், பெண் பரிசாரகர் பதவிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் தகுதியுடைய திணைக்கள ஊழியர்களுக்கான எழுத்து மூலப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

தமிழ் மொழி, சுகாதாரம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடத்தப்படும் என்று யாழ். சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [த-117]

### அப்துல் மஜீத் அமைச்சரானார்

கொழும்பு, ஜன. 25

நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. அப்துல் மஜீத் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் நேற்று ஜனாதிபதி பிரேமதாஸா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். [ஒ-எ]

### நினைவு தினம்

கொழும்புத்துறை, ஜன. 25

தோலகட்டி றோசரியன் ஆச்சிரம ஸ்தாபகர் அருள்திரு வி. ஏ. தோமஸ் அடிகளாரின் 28 ஆவது சிரார்த்த தினம் யாழ். கோவில் வீதி அருள் ஆச்சிரமத்தில் நாளை (ஞாயிறு) மாலை 5.00 மணிக்குத் திருப்பலிப் பூசையுடன் கொண்டாடப்படவுள்ளது. [ஒ-30]

### பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாணம் புனித சார்ள்ஸ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறும் என அதிபர் அறிவித்துள்ளார். [ஒ]

### உன்னிச்சையில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜன. 25

மட்டக்களப்பு, உன்னிச்சைப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் தேடுதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஊறணி முகாமைச் சேர்ந்த விசேட பொலீஸ் கொமாண்டோக்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர் என்றும் தெரிய வந்தது. [ஒ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சு வேலைகளுக்காக அலைந்து திரியாதீர்கள்

ஒரே இடத்தில் சகல தேவைகளையும்
**பூர்த்தி செய்து கொள்ளலாம்**

★ கடிதத் தலைப்பு Letter Heads
★ விலாச அட்டை Visiting Cards
★ கடித உறைகள் Envelopes
★ சுவரொட்டிகள் Posters
★ துண்டுப்பிரசுரங்கள் Hand Bills
★ புத்தகங்கள் Books
★ மலர் வெளியீடுகள் Bulletins

போன்ற சகல ஆங்கில, தமிழ் அச்சு வேலைகளை நாம் வனப்புடனும், சிறப்புடனும் உரிய நேரத்தில் செய்து தருவோம்.

**உதயன்**

292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.


## அறிவித்தல்

**தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு**
**தமிழீழ விடுதலைப் புலிகள்**
**தலைமைச் செயலகம், தமிழீழம்.**

யாழ். மாவட்டத்தில் உள்ள இணக்க மன்றுகள் / மேன்முறையீட்டு மன்றுகள் / ஆரம்ப நீதி மன்றுகளின் தீர்வுகளை இணக்கமாக ஏற்றுக்கொண்டு இதுவரை காலமும் நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்களுக்கும், மேற்படி மன்றுகளில் விசாரணைகளுக்கு சமுகமளிக்காதுள்ள கட்சிக்காரர்களுக்கும் எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

1. எனவே இணக்கத் தீர்வுகளை நிறைவேற்றாது உள்ள கட்சிக்காரர்கள் 1992-01-31 ஆம் திகதிக்கு முன் குறித்த மன்றுகளுக்குச் சென்று இணக்கத் தீர்வை நிறைவேற்ற வேண்டும். அல்லது அவ்வாறு நிறைவேற்ற முடியாமைக்குரிய காரணத்தை எழுத்தில் எழுதி குறித்த மன்றில் ஒப்படைத்தல் வேண்டும்.
2. குறித்த பிணக்குகளின் முறையீட்டாளர்கள் குறித்த மன்றுகளுக்குச் சென்று 1992-01-31 ஆம் திகதிக்கு முன் இணக்கத் தீர்வுப் பிரதியை செயலாளர் / பதிவாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
3. யாழ். மாவட்டத்திலுள்ள இணக்க மன்றுகளில் பிணக்குகள் தாக்கல் செய்து கொள்வதை 1992-02-01 ஆம் திகதியில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

பொறுப்பாளர்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தலைமைச் செயலகம், தமிழீழம். (19451)


சாவகச்சேரி கைத்தொழில் / வர்த்தகர் சங்கம்
**இடம் பெயர்ந்த மக்களின் நிவாரணப் பணிக்காக**
தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தின் அனுசரணையுடன்
நடத்தும்

**மாபெரும் கலை நிகழ்ச்சி**

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் நாடக அரங்குக் கலைஞர்கள் உருவாக்கிய
க. சிதம்பரநாதனின் கைவண்ணத்தில் உருவான
★ **உயிர்த்த மனிதனின் - கூத்து** (நாடகம்)
சாந்தன் இசைக் குழுவினர் வழங்கும்
★ **விடுதலை ராகங்கள்** (இசை மழை)
விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக ஆதரவில்
பொன். கணேசமூர்த்தி வழங்கும்
★ **சந்தனக்காடு**
(26 ஆவது தடவையாக மேடையேறும் நாடகம்)

காலம்: **25-01-1992** சனிக்கிழமை
மாலை 6.00 மணி

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி திறந்தவெளி அரங்கு

அனைவரும் திரண்டு வந்து ஆதரவு நல்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[19460]


# வடக்கு - கிழக்கில் இருப்பது இனப்பிரச்சினை அல்லவாம்

## பிரதமர் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 25

வடக்கு கிழக்கில் தற்போது இருந்து வருவது பயங்கரவாதப் பிரச்சினையே; இனப்பிரச்சினை அல்ல.

பிரதமரும், நிதி அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் முன்கண்டவாறு கூறினார்.

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தை முடித்து வைத்துப் பேசுகையில் பிரதமர் மேலும் சொன்னதாவது;

வன்முறையில் ஈடுபட்டுள்ள குழுக்களை மீண்டும் ஜனநாயக அரசியல் வழிக்குக் கொண்டு வருவதே அரசின் நோக்கமாகும். அவர்கள் தொடர்ந்து வன்செயல்களில் ஈடுபட்டால் அவர்களை முற்றாக ஒழித்து நாட்டைப் பயங்கரவாதத்தில் இருந்து மீட்பதற்கு அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும்.

பாதுகாப்புப்படை படையினர் தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவில்லை. நாட்டில் குழப்பங்கள் தீர்க்கப்படும் வரை அவசரகாலச்சட்டம் அமுலில் இருப்பது அவசியம்.

— இப்படி பிரதமர் சொன்னார். அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பேசுகையில், ஒற்றையாட்சி என்ற வரம்பிற்குள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் கடப்பாடாகும் என்றார்.

[இ-எ]


## விசேட அறிவித்தல்

**உருக்கு / மரத் தளபாடம் / கட்டடம் / நீர்ப்பாசன, நீர் வடிகால் / மின்சார ஒப்பந்த வேலைகள்**

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கத்தில் அங்கத்தவராகப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டுமே அரசாங்கத் திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / வங்கிகள் / மாநகர சபை / பிரதேச சபை போன்றவற்றில் மேற்குறிப்பிட்ட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்குத் தகுதியுடையவர்களாவார்கள் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கிராம முன்னேற்றச் சங்கம் / சனசமூக நிலையம் / கூட்டுறவுச் சங்கம் / தனியார் ஸ்தாபனங்கள் / தனிப்பட்ட ஒப்பந்தகாரர் சகலரும் எமது சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து ஒப்பந்த வேலைகளின்போது ஒத்துழைப்பை நல்கும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

கௌரவச் செயலாளர்

வட மாகாண அரசாங்க
ஒப்பந்தகாரர் சங்கம்,
இல.15, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி-1360)


## அந்தியேட்டி - சபிண்டீகரண அழைப்பு



| | |
|---|---|
| **இளையதம்பி கந்தையா** | **சுப்பிரமணியம் வாசுகி** |
| தோற்றம் : **8-5-1916** | தோற்றம் : **5-4-1986** |
| மறைவு : **28-12-1991** | மறைவு : **28-12-1991** |

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சரவணை ப. நோ. கூ. சங்கத் தலைவருமான இளையதம்பி கந்தையா காலமாகி விட்டார்.

அன்னார் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கமலாதேவி, கருணாநிதி, ராசேஸ்வரி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், தருமகுலசிங்கம் [ஜேர்மனி], வரதராஜன் [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தந்தையும் நா. சுப்பிரமணியம், ப. பொன்னுத்துரை, த. அழகியநாதன், வனஜா, தாரணிதேவி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னார் இறையடி சேர்ந்த அதே தினத்தில் அமரர் சுப்பிரமணியத்தின் தவப்புதல்வி வாசுகியும் காலமானார்.

அமரர் இளையதம்பி கந்தையாவின் அந்தியேட்டிக் கிரியைகள் மானிப்பாய் வீதி, பிள்ளையார் விலாஸில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 26-1-92 நாளையும், சபிண்டீகரணம் 27-1-92 திங்கட்கிழமையும் நடைபெற உள்ளன. இவ்வைபவங்களில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கிறோம்

இருவரின் ஆன்மாக்களும் சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

கந்தையா குடும்பத்தினரும்,
உறவினர்களும்,

திருமதி வனஜாவும்,
பிள்ளைகளும். [19467]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட் [illegible] 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றறக்ட் வாரம் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி இன்றறக்ட் கழகத்தின் ''ஜொனியன் இன்றறக்ட் வாரம்'' கடந்த 16 ஆம் திகதி முதல் நேற்று வரை அனுஷ்டிக்கப்பட்டது.

இதனையொட்டி பல்வேறு சமூக சேவை மற்றும் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் கல்லூரி இன்றறக்ட் கழகத்தினர் நடத்தினர்.

இன்றறக்ட் வாரத்தின் இறுதிநாளான நேற்று மாலை கல்லூரி மண்டபத்தில் ''இன்றறக்ட் பரிசளிப்பு'' வைபவம் நடைபெற்றது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியனும் அவரது துணைவியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். [உ]

## ஜம்மு - காஷ்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருவர் கொல்லப்பட்டனர் என்றும் பி. பி. ஸி அறிவித்தது.

தாக்குதல் நடந்த சமயம் அக்கட்டடத்தில் பொலீஸ் உயரதிகாரிகள் மாநாடு ஒன்று நடத்திக் கொண்டிருந்தனர் என்றும் கூறப்பட்டது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களில் ஒருவர் பொலீஸ்காரர் என்றும்—

மாநில பொலீஸ் தலைவர் ஜே. எல். சக்சேனா உட்படபலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## யாழ்ப்பாணக்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டையே இதுபற்றிய கவனம் அவசியம் வேண்டும்.— என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

இரண்டொருமாதங்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரியில் மூன்றாவது ''எய்ட்ஸ்'' நோயாளி அடையாளம் காணப்பட்டார் என்றும்—

அந்த நோயாளிக்கும் தன் நிலைமை தற்போது தெளிவாகத் தெரியும் என்றும் —

அவர் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய முன்னேற்பாடுகள், நடவடிக்கைகள் குறித்து வைத்திய வட்டாரங்கள் ஆலோசித்து வருவதாகவும் டாக்டர் நச்சினார்க்கினியன் உதயனுக்கு பிரத்தியேகமாகத் தகவல் வெளியிட்டார், [உ-3-5]

## பேச்சுகள்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

விதைக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் யார்? அவர்களின் குறிக்கோள் என்ன? அவர்களுக்கு தமிழ் மக்கள் மத்தியில் எத்துணை செல்வாக்கு இருக்கிறது? — என்பதெல்லாம் சிங்கள மக்களுக்குத் தெரியாது. அரசாங்கமும் அங்குள்ள பத்திரிகைகளும் உண்மையை இருட்டடிப்புச் செய்வதால் இங்குள்ள யதார்த்த நிலை என்னவென்பது தென்னிலங்கை மக்களுக்குத் தெரியவில்லை.

1986 ஆம் ஆண்டு யாழ். குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தபோது, மக்கள் பயத்துடன் வாழ்க்கை நடத்தியதை நாம் அன்று நேரில் கண்டோம்.

ஆனால் — இன்று — குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் போது மக்கள் சந்தோஷமான அமைதியான வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இந்த அமைதியைக் குலைக்கும் வகையில் பாரிய இராணுவ நடவடிக்கை எத்தனையும் அரசு எடுக்கலாம் என்ற பீதியே மக்கள் மனதில் காணப்படுகிறது.

மக்களின் அமைதி வாழ்வைக் குழப்பக் கூடிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நிறுத்தும்படியும்—

பேச்சுமூலம் தீர்வு காண முயற்சி எடுக்கும்படியும் ஜனாதிபதியை நாம் நேரில் கண்டு வலியுறுத்துவோம்.

இதேபோன்ற கோரிக்கையை நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்களிடமும், ஏனைய கட்சிகளிடமும் நாம் விடுக்கவிருக்கின்றோம் — என்றார். (உ-ஒ-3)

# வயர்லஸ், கைத்துப்பாக்கி கிணற்றிலிருந்து மீட்பு

சென்னை, ஜன. 25

விசேட புலனாய்வுக் குழுவினர் தமிழ் நாட்டின் பொள்ளாச்சியில் கிணறு ஒன்றில் இருந்து சக்தி வாய்ந்த வயர்லஸ் சாதனம், ஒரு கைத்துப்பாக்கி, தோட்டாக்கள், சயனைட் குப்பிகள் ஆகியவற்றைக் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் மற்றும் ஈ. பி. ஆர். எல், எவ். தலைவர் பத்மநாபா கொலை வழக்குகள் தொடர்பாக கைதான 19 ஆவது சந்தேக நபர் சுசிந்திரன் என்ற மகேஷ் என்பவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் பொள்ளாச்சியைச் சேர்ந்த பெரியசாமி என்ற பொறியியலாளரை பொலீஸார் கைது செய்தனர்.

தம்மிடம் மகேஷ் கொடுத்திருந்த பெட்டியைத் தாம் கிணற்றில் வீசியதாக பெரியசாமி பொலீஸாரிடம் சொன்னாராம்.

பெரியசாமியின் அலுவலகத்தில் இருந்து ஆறு தங்க பிஸ்கட்டுகளை பொலீஸார் கைப்பற்றினர் என்றும் விசேட புலனாய்வுத் துறைத் தலைவர் கார்த்திகேயன் சொன்னார். [இ-எ]

## குளத்தில் மூழ்கி மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 25

நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் தேவரிக் குளத்தில் தாயுடன் குளிக்கச் சென்ற மூன்றரை வயதுப் பெண் குழந்தை குளத்தில் மூழ்கி மரணமானது.

யாழ்ப்பாணம் இராசாவின்தோட்டத்தைச் சேர்ந்த றொபின் சோபிதா என்ற குழந்தையே உயிரிழந்தது. [உ-15]

## செஞ்சிலுவை சங்கத்தினர் இன்று தீவுப்பகுதி விஜயம்

யாழ்ப்பாணம், ஜன. 25

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் இன்று தீவுப் பகுதிக்கு விஜயம் செய்கின்றனர். தீவுப் பகுதியில் படையினரிடம் சிக்கி உள்ள மக்களை நேரில் பார்வையிட்டு அவர்களின் தேவைகளை இவர்கள் அறிந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

கடலில் கைதுசெய்யப்பட்ட மீனவர்களின் விடுதலை குறித்தும், கடலில் மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் காரைநகர் கடற்படை அதிகாரிகளுடன் செஞ்சிலுவையினர் விவாதிப்பர் என்றும் தெரியவருகிறது.

இதே சமயம் —

கடந்த மூன்று மாதங்களாக யாழ். தபாலகத்தில் தேங்கிக் கிடந்த தீவுப்பகுதிக்கான 31 தபால் பொதிகளையும் —

தீவுப்பகுதி ஆஸ்பத்திரிகளுக்கென பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வழங்கிய மருந்து வகைகளையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் இன்று கப்பல் மூலம் அங்கு எடுத்துச் செல்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3-111]

## மரண அறிவித்தல்கள்

திருமதி
**தம்பு பாக்கியம்**

வேலணை கிழக்கு 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி தம்பு பாக்கியம் காலமாகிவிட்டார். அன்னார் தம்பு [C. T. B — முன்னாள் சாரதி] அவர்களின் அன்பு மனைவியும், பரிமளத்தின் சகோதரியும் ஆறுமுகத்தின் மைத்துனியும் நாகேஸ்வரி, ஆனந்தன், நாகலட்சுமி, யோகேஸ்வரன், யோகநாதன், யோகராசா, யோகலட்சுமி ஆகியோரின் பெரியதாயாரும் பெ. பாலசுப்பிரமணியம், சண்முகநாதன், க. பாலசுப்பிரமணியம் [கிளி], வடிவாம்பிகை, அமிர்தாமதி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [25-1-92] பிற்பகல் 2 மணிக்கு இல. 24 சந்தனமாதா கோவில் வீதி சுண்டுக்குளி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

**திருமதி பாலசுப்பிரமணியம்**

24, சந்தனமாதா கோவில் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். [19469]

**செல்வி சாயினி கங்கைவேணியன்**

வேலணை மேற்கு சிற்பனையைச் சேர்ந்த செல்வி சாயினி கங்கைவேணியன் [1½ வயது] காலமானார். இவர் கு. கங்கைவேணியன் [உரிமையாளர், G. N. A Transport] — க. வாசுகி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், க. பிரசாந்தியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

பூதவுடல் இன்று [25-1-1992] முற்பகல் 10 மணியளவில் இல. 14, ஐயனார் கோவில் வீதி, தட்டா தெரு இல்லத்தில் இருந்து இறுதிக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

**கு. கங்கைவேணியன்**
[G. N. A. Transport]

இல. 14, ஐயனார் கோவில் வீதி,
தட்டா தெரு,
யாழ்ப்பாணம். (19468)